இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

புதன்கிழமை 03.06.2026

# குழந்தைகளை பகடைக்காயாகப் பயன்படுத்தியது...!

‘பேத்தி சொல்லி விசிலுக்கு வோட்டுப் போட்டேன்’, ‘பேரன் சொன்னதற்காக விசிலுக்கு வோட்டுப் போட்டேன்’ என்று சொன்னவர்கள் அனைவரும், ‘இப்பத்தான் ஏன் போட்டேன்னு வருத்தப்படுறேன்’’ என்று வருத்தப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். சமூக வலைதளங்களில் இது போன்ற பேட்டிகளை அதிகம் பார்க்க முடிகிறது. பேரன், பேத்திகளுக்கு நல்லது சொல்லி வளர்க்காமல் அவர்கள் சொன்னார்கள் என்று வாக்களித்துவிட்டு இப்போது வருத்தப்படுவதால் என்ன பயன்?

**அந்த அளவுக்கு குழந்தைகளைத் தூண்டினார் விஜய். தனது இத்தனை ஆண்டு கால சினிமாப் புகழை, முதலீடாகப் போட்டார் விஜய். அவர் கட்சி ஆரம்பித்தது வேண்டுமானால் இரண்டு ஆண்டுக்கு முன்பாக இருக்கலாம். ஆனால், மக்களை மயக்கத் தொடங்கி பல காலம் ஆகிவிட்டது. அந்த சினிமா மயக்கம் தான் அவருக்குப் பலரும் வாக்களிக்கக் காரணம். அதிலும் குறிப்பாக குழந்தைகளை தனது பேச்சில் அதிகமாகத் தூண்டினார்.**

**‘நீங்கள் உங்கள் அப்பா, அம்மாவை வாக்களிக்க வையுங்கள். இந்த ஒரு தடவை எனக்கு வாய்ப்பளிக்கச் சொல்லுங்கள்’ என்று குழந்தைகளைத் தூண்டினார் விஜய். இது மன ரீதியான தாக்குதல் ஆகும். அதுவும் குழந்தைகள் மீது செய்யப்பட்ட தாக்குதல் ஆகும்.**

குழந்தைகளுக்கு, சிறுவர்களுக்கு அது தேர்தலுக்காகக் கேட்கப்படும் வாக்கு என்றே தெரியாது. அவர்களுக்குப் பிடித்த ஒருவர், ஏதோ கேட்கிறார். அதைச் செய்ய வேண்டும் என்பது மட்டுமே அவர்களுக்குப் புரிந்திருக்கும். ‘சக்திமானைப்’ பார்த்து அவர் செய்வது போலவே மாடியில் இருந்து இறந்த சிறுவர்களைப் பார்த்துள்ளோம். அதுபோன்ற பொய்மானைப் பார்த்து சிறுவர், சிறுமியர் செய்த செயலாகவே இதைப் பார்க்க வேண்டி இருக்கிறது.

**‘தேர்தல் பிரச்சாரத்தில் த.வெ.க. சார்பில் குழந்தைகளைப் பயன்படுத்தியது தவறு’ என்று சொல்லி சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. கடலூர் மாவட்டம் புவனகிரியைச் சேர்ந்த வழக்கறிஞர் வாசுகி, சென்னை உயர் நீதிமன்றத்தில் இது தொடர்பாக வழக்குத் தாக்கல் செய்துள்ளார். “நடந்து முடிந்த சட்டசபைத் தேர்தல் பிரச்சாரத்தில் பேசிய விஜய், குழந்தைகளைத் தூண்டும் வகையில் பேசினார். ‘நீங்கள் உங்கள் பெற்றோரிடமும் அண்ணன், அக்காவிடமும் சொல்லுங்கள்’ என்று சொன்னார். இது தேர்தல் நடத்தை விதி மீறல் ஆகும்’’ என்று மனுவில் குறிப்பிட்டு இருந்தார். நீதிபதிகள் சுவாமிநாதன், லட்சுமி நாராயணன் ஆகியோர் அடங்கிய அமர்வு முன் விசாரணைக்கு வந்தது.**

த.வெ.க.சார்பில் வாதிட்ட வழக்கறிஞர், “வெறும் செய்திகளின் அடிப்படையில் மனுவைத் தாக்கல் செய்துள்ளார்கள்” என்று சொல்லி இருக்கிறார். வெறும் செய்திகளின் அடிப்படையில் அல்ல, விஜய் பேசிய பேச்சுகள் ஆதாரமாக உள்ளது. “வீட்டில் இருக்கும் குட்டி நண்பா, நண்பீஸ்... விஜய் மாமாவுக்கு வோட்டுப் போடச் சொல்லுங்கள். உங்கள் பெற்றோரையும் வோட்டுப் போடும் வயதில் இருக்கும் அண்ணா, அக்கா, சித்தி, சித்தப்பா எல்லோரையும் விசில் சின்னத்துக்கு வோட்டுப் போடச் சொல்லுங்க’’ என்று விஜய் பேசிய ஆதாரம் போதாதா?

தேர்தல் முடிந்து முதலமைச்சராகப் பொறுப்பேற்ற மேடையிலும் குழந்தைகள், சிறுவர், சிறுமியருக்கு நன்றி சொன்னார் விஜய். இந்த ஆதாரம் போதுமே.

**‘பேத்தி சொன்னதற்காக விசிலுக்கு வோட்டுப் போட்டோம்’, ‘பேரன் சொன்னதற்காக விசிலுக்கு வோட்டுப் போட்டோம்’ என்று சொல்பவர்களின் பேட்டிகள் இணையத்தில் வைரல் ஆகி வருகிறது. எனவே, இது வெறும் செய்திகள் அல்ல. உண்மைகள் என்பதை நிரூபிக்க ஏராளமான ஆதாரங்கள் இருக்கிறது.**

‘குழந்தைகளை தனது அரசியல் சுய லாபத்துக்காகப் பயன்படுத்தியது’ குறித்து ஜூலை 10 ஆம் தேதிக்குள் விஜய் விளக்கம் அளிக்க வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

**“சட்டமன்றத் தேர்தலில் குழந்தைகளை தூண்டிவிட்டு பிரச்சாரம் செய்த விஜய் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்’’ என்று வலியுறுத்தி தேர்தல் ஆணையத்தில் புகார் அளிக்கப்பட்டுள்ளது.**

தலைமைத் தேர்தல் ஆணையருக்கு மூத்த பத்திரிகையாளர் அரவிந்தாக்சன் எழுதியுள்ள கடிதத்தில், “கடந்த ஏப்ரல் மாதம் 21 ஆம் தேதி சென்னை நந்தனத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பேசிய த.வெ.க. தலைவர் விஜய், சட்டமன்றத் தேர்தலில் குழந்தைகளைத் தூண்டி விட்டு த.வெ.க.வுக்குப் பிரச்சாரம் செய்தார். த.வெ.க.வுக்கு வாக்களிக்குமாறு தங்கள் பெற்றோர்களையும் உறவினர்களையும் வலியுறுத்த வேண்டும் என, குழந்தைகளுக்கு விஜய் நிர்ப்பந்தித்தார். குழந்தைகளை இலக்காகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட, இந்தப் பிரச்சாரமானது தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதல்களின் கீழ் கடுமையாகத் தடை செய்யப்பட்டுள்ளது. குழந்தைகளை ஒரு அரசியல் கருவியாகப் பயன்படுத்துவது சட்டப்படி குற்றமாகும். சமூக ஊடகங்களில் பரவி வரும் ஏராளமான காணொளிகளில், சிறார்கள் அழுதுகொண்டும், கதறிக்கொண்டும், கூச்சலிட்டுக்கொண்டும், அடம் பிடித்துக்கொண்டும் இருப்பது காணப்படுகிறது. இதன்மூலம், அவர்கள் தங்கள் பெற்றோர்களையும் குடும்பத்தில் உள்ள வயது வந்த உறுப்பினர்களையும் த.வெ.க.வுக்கு வாக்களிக்குமாறு நிர்ப்பந்திப்பது தெரிகிறது. தங்கள் கோரிக்கையை பெற்றோர்கள் நிறைவேற்றா விட்டால், குழந்தைகள் சாப்பிடக் கூட மறுப்பதாகவும், மேலும், குழந்தைகள் தங்கள் பெற்றோர்களை மிரட்டுவது போன்ற காட்சிகள் சமூக வலைதளங்களில் இடம் பெற்றுள்ளது. எனவே, சட்டமன்றத் தேர்தலில் குழந்தைகளைத் தூண்டிவிட்டு பிரச்சாரம் செய்த விஜய் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும்” என்று அக்கடிதத்தில் குறிப்பிட்டு இருந்தார்.

**தேர்தல் பணிகளில் குழந்தைகளைப் பயன்படுத்தக் கூடாது என்று 2024 நாடாளுமன்றத் தேர்தலின் போது கடுமையான கட்டுப்பாடுகளை தேர்தல் ஆணையம் விதித்திருந்தது. விஜய் மீது தேசிய குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையத்திலும் புகார் அளிக்கப்பட்டுள்ளது.**

**விஜய்யின் பேச்சு சென்னை உயர்நீதிமன்றம், தேர்தல் ஆணையம், தேசிய குழந்தைகள் உரிமைப் பாதுகாப்பு ஆணையம் ஆகிய மூன்றின் விசாரணையிலும் உள்ளது.**

குழந்தைகளை இலக்காகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட, விஜய்யின் பிரச்சாரமானது தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதல்களின் கீழ் கடுமையாகத் தடை செய்யப்பட்ட முறை ஆகும். குழந்தைகளை ஒரு அரசியல் கருவியாகப் பயன்படுத்துவது சட்டப்படி குற்றமாகும். தேர்தல் நடவடிக்கைகளில் குழந்தைகள் மீது செல்வாக்குச் செலுத்தியது தொடர்பாக சுதந்திரமான விசாரணை நடத்தப்பட வேண்டும்.

**குழந்தைகளைக் கட்டாயப்படுத்துவது என்பது பிஞ்சு மனங்களின் மீது நடத்தப்பட்ட அரசியல் அச்சுறுத்தல், வன்முறை ஆகும்.**

## ஆக்கப்பூர்வமான எதிர்க்கட்சியாக தி.மு.க. செயல்படும் என்று கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அறத்துடன் கூறினார்!

# திருச்சியில் முதலமைச்சர் விஜய் அரசியல் புனிதர்போல புளுகு மூட்டைகளை அவிழ்த்து விடுவதைப் பார்த்து தமிழ்நாடு சிரிக்கிறது !

**சென்னை, ஜூன் 3 -**

**மக்கள் தீர்ப்பை மதித்து ஆக்கப்பூர்வமான எதிர்க்கட்சியாக தி.மு.க. செயல்படும் என்று நெஞ்சை நிமிர்த்தியது கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அரசியல் அறம் என்றும், திருச்சியில் முதலமைச்சர் விஜய் அரசியல் புனிதர் போல புளுகு மூட்டைகளை அவிழ்த்து விடுவதை பார்த்து தமிழ்நாடு சிரிக்கிறது என்றும் ‘DMK IT WING’ காட்டமான பதில் அளித்துள்ளது.**

**இதுகுறித்து ‘DMK IT WING’ காட்டமான பதில் வருமாறு: -**

தன்னை யாரோ ஆட்சியமைக்க விடாமல் தடுத்ததாகத் திருச்சியில் மேடையேறி முதலைக்கண்ணீர் வடிக்கிறார் முதலமைச்சர் விஜய்! உற்றுப் பார்த்தால், நாட்டின் அரசமைப்புச் சட்டம் (Constitution) என்றால் என்னவென்றே அவருக்குத் தெரியவில்லை என்பது அவரது பேச்சிலேயே அப்பட்டமாகத் தெரிகிறது.

உண்மையிலேயே உங்களுக்குத் திராணி இருந்தால், ஆளுநரிடம் நீங்கள் அளித்த உரிமைகோரல் கடிதங்களை முதலில் மக்கள் மன்றத்தில் வெளியிடுங்கள்! எப்படியாவது பதவியைப் பிடித்துவிட வேண்டும் என்ற பதவி வெறியில் நீங்கள் அரங்கேற்றிய தகிடுதத்தங்களை நாடறியும்!

காரில் அரங்கேறிய அரசியல் அசிங்கம்: அ.ம.மு.க. உறுப்பினர் காமராஜ் அவர்களைக் காரில் வைத்து அவசரகதியில் கையெழுத்து வாங்கியதும், அந்தக் காணொலியை உங்கள் கட்சியினரே சமூக வலைத்தளங்களில் பரப்பி அது அம்பலமானதும் தான் உங்கள் நேர்மையா?

## ‘DMK IT WING’ காட்டமான பதில்!

பச்சையான குதிரை பேரம்: இதுவரை தமிழ்நாடு அரசியலில் யாரும் செய்யத் துணியாத வகையில், நம்பிக்கை வாக்கெடுப்புக்கு முன்பு அதிமுகவின் ஒரு தரப்பினரைச் சந்தித்து, அவர்களைக் கொறடா உத்தரவை மீறி வாக்களிக்கச் செய்த திரைமறைவு வேலைகளைச் செய்தது யார்? இதுதான் நீங்கள் மேடைதோறும் முழங்கும் நேர்மையின் இலக்கணமா?

இத்தனை அரசியல் தந்திரங்களையும், ஜனநாயக மாண்புக்கு எதிரான வேலைகளையும் செய்துவிட்டு, இப்போது திருச்சியில் ஏதோ ‘அரசியல் புனிதர்’ போலப் புளுகு மூட்டைகளை அவிழ்த்து விடுவதைப் பார்த்துத் தமிழ்நாடு சிரிக்கிறது!

முதல் நாளே மக்கள் தீர்ப்பை மதித்து ஆக்கப்பூர்வமான எதிர்க்கட்சியாக திமுக செயல்படும் என்று நெஞ்சை நிமிர்த்தி, அதிகாரப்பூர்வமாக அறிவித்த எங்கள் கழகத் தலைவர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் அரசியல் அறம் எங்கே? முதலமைச்சர் நாற்காலியில் அமர்ந்த பின்பும் உங்கள் நிர்வாகத் தோல்வியை மறைக்க, பிறர் மீது நீங்கள் பழிபோடும் தரமற்ற அரசியல் எங்கே?

இவ்வாறு ‘DMK IT WING’ கூறியுள்ளது.

## முதலமைச்சர் நாற்காலி வேணும், ஆனா யாரும் கேள்வி கேட்கக் கூடாதுன்னா எப்படி சார்?

**என்ன சார் பண்றது?**

**ஆட்சிக்கு வந்து ஆறு நாள் கூட தாக்குப்பிடிக்க முடியாத அளவுக்கு நிர்வாகம் படு பாதாளத்துல இருக்கு.**

**எங்க பார்த்தாலும் கொலை, கொள்ளை, பாலியல் கொடுமை..**

**இதுபத்தாதுன்னு கரண்ட் இல்லாம மக்கள் தவிப்பு!**

**ஆனா நீங்க CM ஆனதையே மறந்துட்டு, வழக்கம் போல மேடை ஏறி திமுக மேல பழியைப் போட்டு ஒப்பாரி வச்சிட்டு இருக்கீங்க!**

**முதலமைச்சர் நாற்காலி வேணும், ஆனா யாரும் கேள்வி கேட்கக் கூடாதுன்னா எப்படி சார்?**

**ஆளத் தெரியாம அடுத்தவங்க மேல பழியைப் போட்டு தப்பிக்கப் பார்க்காதீங்க.**

**முதல்ல போய் மக்கள் கொடுத்த வேலையைப் பாருங்க CM Saarr!**

–‘DMK IT WING’

## நிர்வாகத் திறமையின்மையா? அல்லது ஏமாற்று வேலையா?

# பயிர்க்கடன்: விவசாயிகளுக்கு இழைக்கப்படும் பச்சைத் துரோகம்!

## முன்னாள் நிதியமைச்சர் தங்கம் தென்னரசு கண்டனம்!

**சென்னை, ஜூன் 3 -**

**“தேர்தல் வாக்குறுதி கொடுக்கும்போது வராத ‘ரிசர்வ் வங்கி விதிமுறைகள் இப்போது மட்டும் வருகிறதா? இது நிர்வாகத் திறமையின்மையா? அல்லது திட்டமிட்டு விவசாயிகளை ஏமாற்றும் வேலையா?’ என்று முன்னாள் நிதியமைச்சர் தங்கம் தென்னரசு அவர்கள் த.வெ.க. அரசுக்குக் கண்டனம் தெரிவித்துள்ளார்.**



இதுகுறித்து அவர் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது :-

“தேனைத் தடவித் தேர்தல் வாக்குறுதி கொடுக்கும்போது வராத ‘ரிசர்வ் வங்கி விதிமுறைகள்’, மக்களை ஏமாற்றி ஆட்சிப் பொறுப்பில் உட்கார்ந்து கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும் என்ற நிலை வரும் போது மட்டும் எங்கே இருந்து திடுமெனக் குதித்து வருகின்றன? இது நிர்வாகத் திறமையின்மையா? இல்லை திட்டமிட்ட ஏமாற்று வேலையா?

இந்திய ரிசர்வ் வங்கியின் வழிகாட்டுதல் நடைமுறைகளின்படிதான் “கூட்டுறவு வங்கிகளில் விவசாயிகள் பெற்ற பயிர்க்கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது” என்று தமிழ்நாடு நிதியமைச்சர் அண்மையில் விளக்கம் சொல்லியிருக்கிறார். கடன் தள்ளுபடி செய்யப்படுவதாக அரசின் சார்பில் வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பில் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளவாறு ரிசர்வ் வங்கியின் வழிகாட்டுதல் என்பது கடந்த ஆண்டு 28.11.2025 அன்றே வழங்கப்பட்டுள்ளது.

**வாக்கு அறுவடை!**

அந்த வழிகாட்டுதலை முழுமையாகத் தெரிந்துகொண்ட பின்னர்தான் 16.4.2026 அன்று த.வெ.க. வெளியிட்ட தேர்தல் அறிக்கையில், “ஐந்து ஏக்கருக்குள் நிலம் வைத்துள்ள விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளில் பெற்ற பயிர்க்கடன் முழுமையாகத் தள்ளுபடி செய்யப்படும். ஐந்து ஏக்கருக்கு மேல் வைத்துள்ள விவசாயிகளின் பயிர்க்கடன் 50 விழுக்காடு தள்ளுபடி செய்யப்படும்” என்று வாக்குறுதி அளிக்கப்பட்டது. ஆகவே, தெளிவாகத் தெரிந்து கொண்டே வாக்குறுதியைத் தந்து, “வாக்கு அறுவடை” முடிந்ததும் இப்போது ரிசர்வ் வங்கியைக் காரணம் காட்டி மறுப்பது விவசாயிகளை முற்றிலும் ஏமாற்றுவதாகும்.

**பொய்யான வாக்குறுதி!**

எனவே, தேர்தலுக்கு முன்னர் அளித்த வாக்குறுதிப்படி, இந்த அரசின் முதல் நிதிநிலை அறிக்கையிலேயே விவசாயிகளின் பயிர்க்கடனை முழுமையாகத் தள்ளுபடி செய்யும் அறிவிப்பினை வெளியிட வேண்டும். பொய்யான வாக்குறுதிகளை விவசாயிகளுக்கு வழங்கி அவர்களுக்கு நம்பிக்கையூட்டிவிட்டு, இப்போது அரைகுறையாக எந்த விவசாயிக்கும் பயனளிக்காத வகையில், பயிர்க்கடன் தள்ளுபடி செய்திருப்பதாகச் சொல்வது விவசாயப் பெருங்குடி மக்களுக்கு இழைக்கப்படும் “பச்சைத்” துரோகமாகும்!”

இவ்வாறு முன்னாள் நிதியமைச்சர் தங்கம் தென்னரசு அவர்கள் தெரிவித்துள்ளார்.

# நாமக்கல் மேற்கு மாவட்டம் முழுவதும் முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழா!

## மாவட்டச் செயலாளர் கே.எஸ்.மூர்த்தி அறிவிப்பு!



நாமக்கல், ஜூன் 3 -

தமிழ்நாட்டின் முன்னாள் முதல்வரும், தி.மு.க. முன்னாள் தலைவருமான முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு மாவட்டம் முழுவதும் சிறப்பாக கொண்டாடுமாறு தி.மு.க. நாமக்கல் மேற்கு மாவட்டச் செயலாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.எஸ். மூர்த்தி அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறியிருப்பதாவது: -

கலைஞர் அவர்களின் 103ஆவது பிறந்தநாள் விழா இன்று (ஜூன் 3ஆம் தேதி) கொண்டாடப்படுகிறது.

இதையொட்டி காலை 9 மணிக்கு வேலூர் பேரூரில் உள்ள பேருந்து நிலையம் முன்பும், காலை 10 மணிக்கு திருச்செங்கோட்டில் உள்ள அண்ணா சிலை முன்பும் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படும்.

மேலும், அனைத்து ஒன்றியங்கள், நகரங்கள், பேரூராட்சி மற்றும் கழகப் பகுதிகளில் உள்ள ஊராட்சிகள் மற்றும் வார்டுகள் தோறும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து, பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி பிறந்தநாள் விழாவை சிறப்பாகக் கொண்டாட வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இவ்விழாவில் கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் திரளாக பங்கேற்குமாறும் அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

இவ்வாறு நாமக்கல் மேற்கு மாவட்டச் செயலாளர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.